[1980 பிப்ரவரி 7] [திரு கூத்தகுடி ச. சண்முகம்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * அந்த நேரத்தில் பலரும் எழுந்து பேசியதனால் என்னால் சரியாக எதனையும் கவனிக்க முடியாமல் போயிற்று; அந்த வார்த்தைகளைச் சொன்னது உண்டா?

திரு. து. புருஷோத்தமன் : அருகில் இருக்கின்ற உங்களுக்கே காது கேட்கவில்லையென்றால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொன்னீர்களா, இல்லையா?

திரு. து. புருஷோத்தமன் : சொல்லவில்லை.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, மக்கள் குரல் பத்திரிகையில் வந்ததோடு, 'தினமணி' பத்திரிகையிலும் மறைமுகமாக, நாசுக்காகப் போடுகிறார்கள். நான் வேண்டுமென்று யாரையும் குற்றம் சொல்லவில்லை. ஆனால் இது மற்றவர்களுக்கு ஏற்பட்டிருந்தால் எப்படியிருந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். யாரும் சொல்லவில்லை என்பதால் நான் இதில் அதிகமாகப் பேச விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாரும் அப்படிச் சொல்லவில்லை என்பதால பிரச்னைக்கே இடமில்லை.

4. கவன ஈர்ப்பு

சேலம் ஆர். சி. பிளாண்ட் கழிவு நீரால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து 54-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானத்தை திரு. தீ. எம். அண்ணாமலை, டாக்டர் கே. சமரசம் ஆகியோர் கொடுத்துள்ளார்கள்.

[முற்பகல் 10-10]

திரு. எம். அண்ணாமலை: தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம் மேட்டூர் கெமிக்கல்ஸ் ஆர். சி. பிளாண்ட் கழிவு நீரால், குடிநீர் கிணறுகளும் பாதிக்கப்பட்டதால் அப்பகுதி மக்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்த' அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த பொது நிகழ்வினைப் பற்றி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1980 பிப்ரவரி 7

மாண்புமிகு திரு திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, பி. என். பட்டி, வீரககல்புதூர், ஆகிய ஊர்களி லுள்ள கிணறுகள் ஆய்வு செய்யப்பட்டன. 187 கிணறுகள் ஏற்கெனவே மூடப்பட்டுள்ளன. இப்போதுள்ள 107 கிணறுகளில், பாசனக் கிணறுகள் 27 மற்றும் பருகுநீர்க் கிணறுகள் 80, 27 பாசனக் கிணறுகளில், 5 கிணறுகள் பயன்படுத்தத்தக்கவை, 2 கிணறுகள் பொறுத்துக் கொள்ளத்தக்கவை (tolerable) 20 கிணறு கள பயன்படுத்தத் தகுதியற்றன. 80 பருகுநீர் கிணறுகளில் 16 கிணறுகள்தாம் பயன்படுத்தத்தக்கன. 6 கிணறுகள் பொறுத் துக்கொள்ளத் தக்கன (tolerable) மீதி கிணறுகள் பயன்படுத்தத் தகுதியற்றவை. பயன்படுத்தத் தகுதியற்ற கிணற்று நீரை முழுவதுமாக இறைத்து விடுதல், இறைக்கப்பட்ட நீர் கிணறு களின் அருகில் தேங்காமல் தவிர்த்தல் முதலிய தீர்வு நடவடிக் கைகள் எடுக்குமாறு கூறப்பட்டுள்ளன.

2. தற்போது திருவாளர்கள் கெமிபிளான்ட் நிறுவனமும். ஆர், சி. பிளான்ட் நிறுவனமும் நாளொன்றுக்கு 30,000 காலன் முதல் 40,000 காலன் வரை பாதுகாக்கப்பட்ட தண்ணீரை, மேற்கூறிய கிராமங்களுக்கு 5 மணி நேரம் விநியோகம் செய் கிறார்கள். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும் மேற்கூறிய கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குகிறது.

மேற்கூறிய இரண்டு தொழில் நிறுவனங்களின் அலுவலர் களுடன் இப்பொருள் பற்றி விவாதிக்கப்பட்டு 31-7-79-க்குள், அவர்களுடைய தொழில் கூடங்களிலிருந்து வெளியேற்றும் கழிவு நீரை சுத்திகரிப்பு செய்து அதனை அப்புறப்படுத்துவதற் கான திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்று நிறுவனங்களின் அலுவலர்கள் இசைவுடன் தீர்மானிக்கப்பட்டது. இம்முடிவுக்குப் பிறகு 20-6-79-ல் மேற்படி தொழில் கூடங் களை நேராய்வு செய்தபோது கெமிபிளான்ட் நிறுவனம் தற்போது தன்னுடைய கழிவு நீரை சுற்றுப்புறத்தில் வெளியிடு வதை நிறுத்தி விட்டதாகவும், கழிவுநீர் 11 செ.மீ. P.V.C. குழாய் மூலம் 3 கி.மீ. அப்பால் உள்ள மேட்டூர் அணைக் கால்வாயில் விடுவதாகவும் அறியப்பட்டது. இதனால் சுற்றி யுள்ள கிராமங்களில் நிலத்தடி நீர் கெடுவது நிரந்தரமாகத் தவிர்க்கப்படடுள்ளது.

ஏற்கெனவே உள்ள பருகுநீர் பற்றாக்குறை வருகின்ற மழைக்காலத்தில் மேலும் மேம்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, அமைச் சருடைய அறிவிப்பிலிருந்து அந்த விவசாயிகளுடைய கிணறு களுக்காக நடவடிக்கை எடுத்து ஏற்கனவே 187 கிணறுகள் மூடப்பட்டதாகவும் மற்றவை பயன்படுவதாகவும் சொன்னார்

கள். ஆனால் இது நடைபெறவில்லை. இன்னும் பொட்டேனேரி நல்லாகவுண்டம்பட்டி, பி. என். பட்டி, வீரக்கல்புதூர், சல்லிக்காடு, கோம்பூரான்காடு ஆகிய இடங்களிலே 100-க்கும் மேற்பட்ட இறைப்புக் கிணறுகளும், 500க்கும் மேற்பட்ட குடிநீர்க் கிணறுகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. குடி தண்ணீர் சப்ளை செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அங்கே மேட்டூரிலிருந்து சேலம் வரக்கூடிய பைப்லைனிலே துளைபோட்டு செத்துக்காடு பகுதியில் கரட்டு உச்சியில் ஒரு டாப் போட்டு வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி போட்டதும் கிராமங்களுக்கு பயனற்ற முறையில் தூரப்பகுதியாகும். கோம்பூரான்காடு, புதுரெட்டியூர் என்ற இடத்திலே டாப் போட்டால் தான் அங்கே இருக்கின்ற கிராமங்களுக்கு குடிதண்ணீர் கிடைக்கும் என்பதாகும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் கேள்வியாக எழுப்பி தகவல் பெற வேண்டுமே தவிர, உரையாற்றுவது நல்லதல்ல.

திரு. எம். அண்ணாமலை : ஒரே ஒரு இடத்திலே குழாய் போட்டு குடிதண்ணீர் கொடுக்கப்படுகிறது. அந்தக் கிராமங்கள் அனைத்திற்கும் குடிதண்ணீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதோடு பாதிக்கப்பட்ட விவசாயிகளின் விளை நிலங்களுக்கும் கிணறுகளுக்கும் நட்ட ஈடு கொடுக்கப்படுமா என்பதை அறியக் கோருகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, குடி தண்ணீருக்கு எந்தவிதமான தட்டுப்பாடும் இல்லாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. கிராமங்களுக்கு 5 மணி நேரம் தண்ணீரை விநியோகம் செய்கிறார்கள். இதைத் தவிர குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகவும் வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போன்று குறைபாடுகள் இருக்குமானால் அரசு அதைப் பரிசீலிக்கும்.

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே மேட்டூர் ஆர். சி. பிளான்ட் மட்டுமல்லாமல் பரவலாகத் தமிழ்நாட்டிலே உள்ள தொழிற்சாலைகளின் கழிவு நீரால் குடிநீர் பாதிக்கப்படுவதோடு, விளை நிலங்களும் பாதிக்கப்பட்டு விடுகிற காரணத்தினால் பொதுவான ஒரு சட்டத்தை இயற்றி, தொழிற்சாலைகளுக்கு உரிமங்கள் வழங்குகிறபோது அவை இப்படித்தான் இருக்க வேண்டுமென்ற முறையிலே நிர்ணயம் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய யோசனையை அரசு பரிசீலிக்கும்.